அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

# தமிழ் - ஆண்டு 9

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

அது ஒரு கோடைகால மாலைப்பொழுது. நானும் எனது நண்பர்களும் கடற்கரைக்குச் சென்றோம். மெல்லிய வெப்பமான கடற்காற்று எங்களைத் தழுவிச் சென்றது. அதை உணர்ந்தபடியே மணற்பரப்பில் ஒரு துணியை விரித்து அதில் இருந்தோம். அங்கே நாம் கண்ட காட்சிகள் கண்களுக்கும் மனத்துக்கும் பெருவிருந்தாய் அமைந்தன. கதிரவன் தன் பொற்கதிர்களில் செந்நிறம் கலந்து சிதறவிட்டிருந்தான். கடற்கரையின் மணலில் ஒளி பட்டு தங்கத்தரை போல மின்னியது. மெல்ல எழுந்துவரும் கடலலைகள் எழுப்பிய ஓசையும் காதுகளுக்கு இதமாக இருந்தது. மேற்கு வானில் அழகிய ஓவியங்கள் போன்ற வண்ணச் சிதறல்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்த நிறைவுடன் வீட்டுக்குத் திரும்ப மனமின்றிப் புறப்பட்டோம்.